

SURA'S
RPF/RPSF
Sub-Inspector(Exe)
SURA'S
2022
RPF/RPSF
சப்-இன்ஸ்பெக்டர்
SUB INSPECTOR (Exe)
DEGREE STANDARD
பொது அறிவு
(General Awareness)
கணிதவியல்
(Arithmetic)
அறிவுக்கூர்மை மற்றும் உய்த்துணர்தல் / புரிதிறன்
(General Intelligence & Reasoning)
வீ.வீ.கே. சுப்புராசு
surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2

சுராவின்

# RPF/RPSF

# சப்-இன்ஸ்பெக்டர்

# Sub-Inspector (Exe)

- **பொது அறிவு** (GENERAL AWARENESS)
- **கணிதவியல்** (ARITHMETIC)
- **அறிவுக்கூர்மை மற்றும் உய்த்துணர்தல் / புரிதிறன்** (GENERAL INTELLIGENCE & REASONING)

ஆக்கியோன்

**வீ.வீ.கே. சுப்புராசு**

DEGREE STANDARD

**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்**

சென்னை

www.surabooks.com

suracollege@gmail.com 044-48629977 / 42043273

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2

© PUBLISHERS

**RPF/RPSF SUB INSPECTOR**
(Tamil)

*by*
**V.V.K. Subburaj**

ISBN : 978-93-87150-98-0

www.surabooks.com

[NO ONE IS PERMITTED TO COPY OR TRANSLATE IN ANY OTHER LANGUAGE THE CONTENTS OF THIS BOOK OR PART THEREOF IN ANY FORM WITHOUT THE WRITTEN PERMISSION OF THE PUBLISHERS]

SURA COLLEGE OF COMPETITION

***Head Office :*** 1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, **Chennai - 600 040.**
Phones: 044-48629977, 42043273.

Printed at G.T. Krishna Press, Chennai - 600 102 and Published
by V.V.K.Subburaj for Sura College of Competition
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-48629977, 42043273.
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2

# பொருளடக்கம்


பக்கம்

RPF / RPSF Syllabus & Scheme of Examination ..... iv

- **பொது அறிவு** (GENERAL AWARENESS) ..... 1 - 336
  - இந்திய வரலாறும் பண்பாடும் மற்றும் இந்திய தேசிய இயக்கம் ..... 1 – 80
  - புவியியல் ..... 1 – 48
  - குடிமையியல் மற்றும் பொருளியல் ..... 1 – 64
  - அறிவியல் (இயற்பியல் ■ வேதியியல் ■ உயிரியல்) ..... 1 – 144
- **கணிதவியல்** (ARITHMETIC) ..... 1 - 208
- **அறிவுக்கூர்மை மற்றும் உய்த்துணர்தல் / புரிதிறன்** (GENERAL INTELLIGENCE & REASONING) ..... 1 - 176

சமீபத்திய செய்திகள்


www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2

# NOTIFICATION

## RPF / RPSF - Recruitment for the Post of

## SUB INSPECTOR (Exe)

**Age:**

The candidates must not be less than 20 years and not more than 25 years.

**Educational Qualification:**

Graduation from a Recognized University

**SCHEME OF EXAMINATION:**

Details of time allowed and no. of questions for CBT shall be decided by the CRC. For the purpose of guidance, however, the following can be followed:

**Sub-Inspector (Exe)**

| Subject | No. of Qns. | Marks | Time Allowed |
|---|---|---|---|
| General Awareness | 50 | 50 | 90 minutes |
| Arithmetic | 35 | 35 | |
| General Intelligence & Reasoning | 35 | 35 | |

Candidates will be required to answer all questions and will be awarded 01 [one] mark for each correct answer. 1/3 mark will be deducted for each incorrect answer. No mark will be awarded or deducted for questions not attempted.

For the convenience to conduct the examination in different Indian languages, specific centres will be earmarked for the examination in specific languages. Question paper will be set in Hindi, English, Urdu, Tamil, Telugu, Konkani, Malayalam, Kannada, Marathi, Gujarati, Bengali, Oriya, Punjabi, Assamese and Manipuri.



suracollege@gmail.com 044-48629977 / 42043273

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2

# இந்திய வரலாறும் பண்பாடும் மற்றும் இந்திய தேசிய இயக்கம்


மனிதர்களின் பரிணாம வளர்ச்சியும் வரலாறும் 2
வரலாற்றுக்கு முந்தைய காலம் 5
பண்டைய நாகரிகங்கள் 7
சிந்துவெளி நாகரிகம் 10
வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும்
தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் 12
பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் : சங்ககாலம் 14
தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் 17
மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் 19
குடித்தலைமையிலிருந்து பேரரசு வரை 23
மௌரியப் பேரரசு 24
குப்தர்கள் 26
ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி 29
தென்னிந்திய அரசுகள் 31
வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் 32
அரேபியர், துருக்கியர் வருகை மற்றும் டெல்லி சுல்தான்கள் 34
இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் & சோழர்கள் முதல் முகலாயர்கள் வரை 36
பிற்காலச் சோழரும் பண்பாடும் 39
பாமினி - விஜய நகர அரசுகள் 41
முகலாயப் பேரரசு 43
மராத்தியர்கள் 45
பன்னாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம் 47
அறவியலும் இந்தியப் பண்பாடும் 48
தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் 51
ஐரோப்பியர் வருகை 53
ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள் 55
ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள் 57
நவீனத்தை நோக்கி 62
ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் 64
இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி 68
தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும் 76
இந்திய விடுதலைப் போரில் முதல் உலகப்போரின் தாக்கம் 77
விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு 78
விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு 80




suracollege@gmail.com 044-48629977 / 42043273

www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2



# மனிதர்களின் பரிணாம வளர்ச்சியும் வரலாறும்

1. **பரிணாமத்தின் வழிமுறை**
   A) நேரடியானது B) மறைமுகமானது
   C) படிப்படியானது D) விரைவானது

2. **தான்சானியா எந்தக் கண்டத்தில் உள்ளது?**
   A) ஆசியா B) ஆப்பிரிக்கா
   C) அமெரிக்கா D) ஐரோப்பா

3. **தாடை நீட்சி சற்று குறைந்தும், பெரிய கால்விரல்களுடனும் காணப்பட்ட மனிதர்கள்.**
   A) ஹோமோ எரக்டஸ் B) ஹோமோ ஹேபிலிஸ்
   C) நியாண்டர்தால் D) ஹோமோ சேப்பியன்ஸ்

4. **பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் ............ மற்றும் ............ ஆகும்.**
   A) வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல்
   B) வேட்டையாடுதல், விவசாயம் செய்தல்
   C) மீன்பிடித்தல், கைவினைப் பொருட்கள் செய்தல்
   D) வேட்டையாடுதல், கற்கருவிகள் செய்தல்

5. **கீழ்க்கண்ட எதனுடைய கண்டுபிடிப்பு விவசாயத்தை எளிதாக்கியது ?**
   A) சக்கரம் B) உருளை வடிவக் கட்டைகள்
   C) கலப்பை D) ஏர்

6. **பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள ............ என்னுமிடத்தில் காணப்படுகின்றன.**
   A) குமுதிபதி B) மாவடைப்பு
   C) கீழ்வலை D) கரிக்கையூர்

7. **கீழ்க்கண்ட எந்த மனித இனம் நெருப்பின் பயனை முதன்முதலாக அறிந்திருந்தது ?**
   A) நியாண்டர்தால் B) ஹோமோ எரக்டஸ்
   C) ஹோமோ ஹேபிலிஸ் D) ஹோமோ சேப்பியன்ஸ்

8. **மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு**
   A) சக்கரம் B) கலப்பை
   C) விவசாயம் D) கோடாரி

9. **கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக.**
   **கூற்று (A)** : உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.
   **காரணம் (R)** : தட்பவெப்ப நிலை மாற்றமாகும்.
   **சரியான விடையளி:**
   A) கூற்று சரி
   B) கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.
   C) கூற்றும் காரணமும் சரி. ஆனால் பொருத்தமான காரணம் அல்ல.
   D) கூற்றும் காரணமும் தவறானவை

> **தொல்லியல்**
> வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும், பற்றிப் படிப்பது **'தொல்லியல்'** (Archaeology) ஆகும். தொல்லியல் ஆய்விற்கு முக்கிய ஆதாரமாக விளங்குவது அகழ்வாராய்ச்சிப் பொருட்களாகும்.

10. **கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக.**
    **கூற்று (A)** : குரோமக்னான்ஸ் மனிதர்கள் ஆப்பிரிக்காவில் உள்ள குகைகளில் வாழ்ந்தார்கள்.
    **காரணம் (R)** : ஆப்பிரிக்காவில் வனவிலங்குகள் குறைந்த அளவில் காணப்பட்டன.
    **சரியான விடையளி :**
    A) கூற்று சரி
    B) கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.
    C) கூற்றும் காரணமும் சரி. ஆனால் பொருத்தமான காரணம் அல்ல.
    D) கூற்றும் காரணமும் தவறானவை

11. **தவறான இணையைக் காண்க.**
    A) ஆஸ்ட்ரலோபி திகஸ் - இரு கால்களால் நடப்பது
    B) ஹோமோ ஹேபிலிஸ் - தாடை நீட்சி குறைந்து காணப்பட்டது
    C) ஹோமோ எரக்டஸ் - நிமிர்ந்து நின்ற மனிதன்
    D) ஹோமோ சேப்பியன்ஸ் - முழுமை பெற்ற மனிதன் அல்லன்

12. **ஹைடல்பர்க் மனிதன் வாழ்ந்த இடம்**
    A) சீனா B) பிரான்ஸ்
    C) ஆப்பிரிக்கா D) லண்டன்

13. **தவறான இணையைக் காண்க.**
    A) நியாண்டர்தால் - ஐரோப்பா மற்றும் ஆசியா (யூரோசியா)
    B) குரோமக்னான்ஸ் - பிரான்ஸ்
    C) ஹோமோ எரக்டஸ் - சீனா
    D) ஹோமோ ஹேபிலிஸ் - தென் ஆப்பிரிக்கா

14. **பொருத்துக.**
    a) லோத்தல் 1. கர்நாடகா
    b) ஹன்சாகிப் பள்ளத்தாக்கு 2. தூத்துக்குடி
    c) ஆதிச்சநல்லூர் 3. நீலகிரி
    d) கரிக்கையூர் 4. குஜராத்

    **குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 4 | 1 | 2 |

> **மானுடவியல் (Anthropology)**
> மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சிகளையும் பற்றி படிப்பது மானுடவியல் ஆகும்.
> மானுடவியல் என்ற சொல் இரண்டு கிரேக்கச் சொற்களிலிருந்து பெறப்பட்டது. `Anthropos' என்பதன் பொருள் **'மனிதன்'**. `logos' என்பதன் பொருள் **'எண்ணங்கள்'** அல்லது **'காரணம்'**.

15. **பீகிங் மனிதனின் வாழ்விடம்**
    A) சீனா
    B) தென் ஆப்பிரிக்கா
    C) கிழக்கு ஆப்பிரிக்கா
    D) ஜெர்மனி

16. **மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது**
    A) கொரில்லா B) சிம்பன்ஸி
    C) உராங் உட்டான் D) கிரேட் ஏப்ஸ்

17. **விவசாயம் மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்**
    A) பழைய கற்காலம் B) இடைக் கற்காலம்
    C) புதிய கற்காலம் D) பெருங்கற்காலம்

18. **பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர்**
    A) ஹோமோ ஹேபிலிஸ் B) ஹோமோ எரக்டஸ்
    C) ஹோமோ சேப்பியன்ஸ் D) நியாண்டர்தால்

1. (C) 2. (B) 3. (B) 4. (A) 5. (C) 6. (D) 7. (B) 8. (A) 9. (B) 10. (D) 11. (D) 12. (D)
13. (C) 14. (A) 15. (A) 16. (B) 17. (C) 18. (C)



suracollege@gmail.com 044-48629977 / 42043273

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2



**19. பொ.ஆ.மு. 3–ஆம் நூற்றாண்டில் சேர, சோழ, பாண்டியர்கள் குறித்து அறிந்து கொள்ள எந்த மன்னரின் கல்வெட்டுகள் உதவுகின்றன?**
A) புலிகேசி B) அசோகர்
C) சந்திரகுப்தர் D) தனநந்தர்

**20. எகிப்து, இஸ்ரேல்–பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**
A) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு
B) பிறைநிலப் பகுதி
C) ஸோலோ ஆறு
D) நியாண்டர் பள்ளத்தாக்கு

> **சிக்கிமுக்கிக் கல்**
> தீப்பெட்டியைப் பயன்படுத்தாமல் நெருப்பை உருவாக்கும் பழக்கம் இன்றளவும் நீலகிரி மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் உள்ளது.

**21. சர் இராபர்ட் புரூஸ்ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில் கீழ்க்கண்ட எந்தக் காலத்தைச் சேர்ந்த கருவிகளை முதன் முறையாகக் கண்டுபிடித்தார் ?**
A) கற்காலம் B) பழங்கற்காலம்
C) இடைக் கற்காலம் D) புதியகற்காலம்

**22. தொல்பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல்**
A) தொல்லியல் B) தொல்மானுடவியல்
C) நிலவியல் D) உளவியல்

**23. மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆராய்ந்து அறிந்து கொள்ளும் இயல்**
A) தொல்மானுடவியல் B) நிலவியல்
C) நுண்ணுயிரியல் D) தொல்லியல்

**24. புவி சுமார் ............... பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது.**
A) 5.59 B) 4.15
C) 4.54 D) 5.52

**25. ஆஸ்ட்ரோலோ பித்திஸைன் என்பதன் பொருள்**
A) டைனோசர்
B) இடைத் தொல்லுயிரூழி
C) தெற்கத்திய மனிதக் குரங்கு
D) நுண்ணுயிரிகள்

> **குரோமக்னான்ஸ்**
> குகையில் வாழ கற்றுக் கொண்ட குரோமக்னான்ஸ் மனிதர்கள் பிரான்சில் உள்ள லாஸ்காஸ் என்னுமிடத்திலுள்ள குகைகளில் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இவர்களிடம் இறந்தவர்களை புதைக்கும் பழக்கம் இருந்தது.

**26. பலசெல் உயிரினங்கள் தோன்றிய காலம்**
A) முந்தைய தொல்லுயிரூழி
B) பழந்தொல்லுயிரூழி
C) இடைத் தொல்லுயிரூழி
D) பாலூட்டிகள் காலம்

**27. டைனோசர்கள் வாழ்ந்த காலகட்டம்**
A) முந்தைய தொல்லுயிரூழி B) பழந்தொல்லுயிரூழி
C) இடைத் தொல்லுயிரூழி D) பாலூட்டிகள் காலம்

**28. வரலாறு எழுதுவது பண்டைய .......... காலத்தில் தொடங்கியது எனக் கூறலாம்.**
A) எகிப்தியர் B) கிரேக்கர்கள்
C) ரோமானியர்கள் D) இந்தியர்கள்

**29. வரலாற்றின் தந்தை**
A) ஹெரோடோடஸ் B) ஹொர்குலிஸ்
C) அரிஸ்டாட்டில் D) சாக்ரடீஸ்

**30. என்னிகால்டி–நன்னா அருங்காட்சியகம் கீழ்க்கண்ட எந்த இடத்தில் அமைந்திருந்தது ?**
A) சுமேரியா B) பாபிலோனியா
C) மெசபடோமியா D) பல்கேரியா

**31. தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் மிகப் பழைமையான கேபிடோலைன் அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம்**
A) இத்தாலி B) ஜெர்மனி
C) பிரான்ஸ் D) பெல்ஜியம்

**32. உலகின் மிகப் பழைமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம்**
A) லண்டன் B) மாஸ்கோ
C) நாளந்தா D) ஆக்ஸ்போர்ட்

**33. கூரிய வெட்டுமுனை உள்ள கல்லால் ஆன உளி இவ்வாறு அழைக்கப்படுகிறது**
A) பிளேக்ஸ் B) செதில்
C) கருங்கல் D) பியூரின்

**34. குரோமக்னான் என்று அழைக்கப்படும் மனிதர்கள் வாழ்ந்த இடம்**
A) ஐரோப்பா B) கென்யா
C) ஆசியா D) ஆப்பிரிக்கா

**35. குரோமக்னான் என்ற மனிதர்கள் வாழ்ந்த காலகட்டம்**
A) கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு
B) இடைப் பழங்கற்காலப் பண்பாடு
C) மேல் பழங்கற்காலப் பண்பாடு
D) இடைக் கற்காலப் பண்பாடு

> **தம்மா**
> 'தம்மா' என்பது பிராகிருத சொல். இது சமஸ்கிருதத்தில் 'தர்மா' எனப்படுகிறது. இதன் பொருள் 'அறநெறி' ஆகும்.

**36. தமிழ்நாட்டில், கீழ்க்கண்ட எந்த இடத்தில் கீழ்பழங்கற்காலப் பண்பாட்டின் கருவிகள் கிடைத்துள்ளன ?**
A) அயப்பாக்கம் B) அதிரம்பாக்கம்
C) கொட்டிவாக்கம் D) மேடவாக்கம்

**37. உலகில் மனித மூதாதையர்கள் வசித்த மிக முக்கியமான இடங்களில் ஒன்று**
A) பாலாறு B) மணிமுத்தாறு
C) அடையாறு D) கொசஸ்தலையாறு

**38. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து விடை தேர்க.**
I. எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.
II. வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள், அழகான ஓவியங்களையும் கலைப் பொருட்களையும் உருவாக்கினார்கள்.
III. வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.
IV. வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என அழைக்கப்படுகிறது.

**சரியான விடையளி :**
A) I மட்டும் சரியானது B) I மற்றும் II சரியானவை
C) I மற்றும் IV சரியானவை D) II மற்றும் III சரியானவை

**39. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து விடை தேர்க.**
I. 'செல்ட்' எனப்பட்ட தீட்டப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினர்.
II. புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்றுகள் சென்னை மாவட்டத்திலுள்ள பையம்பள்ளியில் காணப்படுகின்றன.

19. (B) 20. (B) 21. (B) 22. (A) 23. (A) 24. (C) 25. (C) 26. (A) 27. (C) 28. (B) 29. (A) 30. (C)
31. (A) 32. (D) 33. (D) 34. (A) 35. (C) 36. (B) 37. (D) 38. (C)



suracollege@gmail.com 044-48629977 / 42043273

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2



**III.** புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம் வெண்கலக் காலம் எனப்படுகிறது.

**IV.** விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.

**சரியான விடையளி :**

A) I மட்டும் சரியானது

B) II மட்டும் சரியானது

C) II மற்றும் III சரியானவை

D) IV மட்டும் சரியானது

> **துறைகள்**
> **நாணயவியல்** (Numismatics) – நாணயம், அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறை.
> **கல்வெட்டியல்** (Epigraphy) – கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை.

40. **கூற்றுக்கான காரணத்தை ஆராய்க.**

**கூற்று (A)** : தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக்கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**காரணம் (R)** : நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தது.

**சரியான விடையளி:**

A) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

B) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

C) கூற்று சரி, காரணம் தவறு.

D) கூற்றும் காரணமும் தவறானவை.

> **தொல்பொருள் ஆதாரங்கள் :**
> **தொல்கைத்திறன் பொருட்கள்:** பானைகள், பொம்மைகள், கருவிகள், அணிகலன்கள், நாணயங்கள்.
> **கல்வெட்டுகள் :** பாறை கல்வெட்டுகள், கோயில் சுவர் கல்வெட்டுகள், உலோகத் தூண்கள்.
> **நினைவுச் சின்னங்கள் :** அரண்மனைகள், கோட்டைகள், கோயில்கள், ஸ்தூபிகள், மடங்கள்.

41. **கூற்றுக்கான காரணத்தை ஆராய்க.**

**கூற்று (A)** : பொ.ஆ.மு. 3–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகரின் கல்வெட்டுக் குறிப்புகள் அவரது பேரரசுக்கு வெளியேயிருந்த சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் சத்தியபுத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.

**காரணம் (R)** : தமிழகத்தைச் சார்ந்த பழங்கால அரசர்கள் அரசியல் நோக்கில் அவர்களின் ஆட்சியை இரும்புக் காலத்தில் துவக்கினார்கள். மேலும் அரசியல் ரீதியாக சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள்.

**சரியான விடையளி :**

A) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

B) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

C) கூற்று சரி, காரணம் தவறு.

D) கூற்றும் காரணமும் தவறானவை

> **இலக்கிய ஆதாரங்கள்:**
> **மதசார்பற்ற இலக்கியங்கள்:** வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள், இந்திய ஆசிரியர்களின் நூல்கள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்.
> **மதசார்புள்ள இலக்கியங்கள்:**
> **இதிகாசங்கள் :** இராமாயணம், மகாபாரதம், பல்வகைப் புராணங்கள்
> **பக்தி இலக்கியங்கள் :** தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப்பிரபந்தம்.

42. **பொருத்துக.**

a) பழங்கால மானுடவியல் — 1. டெரிஸ்

b) கோடாரிக் கருவிகள் — 2. வீனஸ்

c) கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் — 3. அச்சூலியன்

d) செம்மணல் மேடுகள் — 4. நுண்கற்காலம்

e) சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் — 5. மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 3 | 2 | 1 | 4 |
| B) | 3 | 2 | 1 | 4 | 5 |
| C) | 2 | 1 | 4 | 5 | 3 |
| D) | 1 | 4 | 5 | 3 | 2 |

> **நியாண்டர்தால் மனிதன் :** குளிர்காலத்தைத் தாக்குப் பிடிக்க அவசியமான தகதகப்பான வீடுகள், தைக்கப்பட்ட ஆடைகள், ஊசிகள் இவற்றை நியாண்டர்தால் மனிதர்கள் பெற்றிருக்கவில்லை.

43. **பொருத்துக.**

a) என்னிகால்டி–நன்னா அருங்காட்சியகம் — 1. பொ.ஆ.1471

b) கேபிடோலைன் அருங்காட்சியகம் — 2. பொ.ஆ.1820-1903

c) ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் — 3. பொ.ஆ.1809-1882

d) ஹெர்பர்ட் ஸ்பென்சர் — 4. பொ.ஆ.530

e) சார்லஸ் டார்வின் — 5. பொ.ஆ.1677

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 5 | 2 | 3 |
| B) | 1 | 5 | 2 | 3 | 4 |
| C) | 5 | 2 | 3 | 4 | 1 |
| D) | 2 | 3 | 4 | 5 | 1 |

> **லூசி :** ஆஸ்ட்ரோலோபித்திஸைன்கள் 'லூசி' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

> **சிம்பன்சி :** சிம்பன்சி இனத்தின் மரபணுவை (டி.என்.ஏ.) எடுத்து ஆய்வு செய்ததில் அதன் பண்புகள் மனித இனத்துடன் 98% ஒத்து உள்ளது. சிம்பன்சி மற்றும் பிக்மி சிம்பன்சி (பொனாபோ) வகையினங்கள் நமக்கு நெருக்கமான, தற்போது உயிர்வாழும் உயிரினங்களாகும்.

> **வேளாண்மையும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதலும் : மனிதவரலாற்றின் ஒரு மைல் கல்**
> சுமார் பொ.ஆ.மு. 7000 ஆண்டுகள் அல்லது அதற்கு முன்பே இந்தியாவிலும் சீனாவிலும் அரிசி விளைவிக்கப்பட்டிருக்க வேண்டும்.
> பொ.ஆ.மு.6000 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்கு பகுதியில் (பாகிஸ்தான்) உள்ள மெஹர்காரில் கோதுமையும் பார்லியும் பயிரிடப்பட்டன.
> நாய்கள்தான் முதலில் பழக்கப்படுத்தப்பட்டுள்ளன. செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் பொ.ஆ.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் தென்மேற்கு ஆசியாவில் பழக்கப்படுத்தப்பட்டன.
> சுமேரிய நாகரிகத்தில் நிலத்தை உழுவதற்கு காளைகள் பயன்படுத்தப்பட்டன. புதிய கற்கால மெஹர்காரில் ஆடுகள், மாடுகள் பழக்கப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

> **பாறை ஓவியங்கள் :** மேற்கு பிரான்ஸில் உள்ள லாஸ்கா பாறை ஓவியங்கள் 17,000 வருடங்கள் பழைமையானவை.

> - பழைய கற்கால மனிதர்கள் நாடோடியாக வாழ்ந்தார்கள்.
> - விலங்குகளை வேட்டையாடி மாமிசத்தை உண்டனர்.
> - கரடுமுரடான பளபளப்பற்ற கற்கருவிகளைப் பயன்படுத்தினர்.

39. (A) 40. (D) 41. (B) 42. (A) 43. (A)



suracollege@gmail.com 044-48629977 / 42043273

Click Here to Learn more : https://bit.ly/3H5XJw2



# வரலாற்றுக்கு முந்தைய காலம்

1. **பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை**
   A) வணிகம் B) வேட்டையாடுதல்
   C) ஓவியம் வரைதல் D) விலங்குகளை வளர்த்தல்

2. **பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்துகொள்ள பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது ?**
   A) அருங்காட்சியகங்கள் B) புதைபொருள் படிமங்கள்
   C) கற்கருவிகள் D) எலும்புகள்

3. **தமிழகத்தில் புதிய கற்கால பொருட்கள் கிடைத்த இடம் எது?**
   A) திருவேற்காடு B) பையம்பள்ளி
   C) கடலூர் D) ஆதிச்சநல்லூர்

4. **பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு**
   A) குரங்கு B) பசு
   C) நாய் D) எருது

5. **அசோகச் சக்கரத்தில் .............. ஆரக்கால்கள் உள்ளன.**
   A) 24 B) 25
   C) 26 D) 28

6. **The Search for the India's Lost Emperor என்ற நூலின் ஆசிரியர்**
   A) வில்லியம் ஜோன்ஸ்
   B) ஜேம்ஸ் பிரின்செப்
   C) அலெக்ஸாண்டர் கன்னிங்காம்
   D) சார்லஸ் ஆலன்

> **செய்பொருள் :** மனிதனால் உருவாக்கப்பட்ட அல்லது மாற்றி அமைக்கப்பட்ட ஒரு பொருள் அல்லது கருவி **'செய்பொருள்'** (artefact) எனப்படுகிறது.
>
> **அறிவாற்றல் :** எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் புலனாற்றல்களால் அறிவையும் புரிதலையும் பெறும் மனதின் செயல்பாடு **'அறிவாற்றல்'** (Cognition) எனப்படுகிறது.

7. **தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் கீழ்க்கண்ட எதிலிருந்து பெறப்பட்டது?**
   A) சாரநாத் கற்றூண் B) சாஞ்சி ஸ்தூபி
   C) அசோகரின் கல்வெட்டு D) அசோகர் வெளியிட்ட நாணயம்

8. **'தம்மா' என்பது ........... சொல்.**
   A) சமஸ்கிருதம் B) பிராகிருதம்
   C) மண்டாரின் D) ஜப்பானிய

9. **'இஸ்டோரியா' என்ற சொல்**
   A) சமஸ்கிருத சொல் B) பிராகிருத சொல்
   C) கிரேக்க சொல் D) ரோமானிய சொல்

10. **கூற்றையும் காரணத்தையும் பொருத்துக.**
    **கூற்று (A)** : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.
    **காரணம் (R)** : குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.
    **சரியான விடையளி:**
    A) (A) சரி (R) தவறு
    B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை
    C) (A) தவறு (R) சரி
    D) (A) மற்றும் (R) இரண்டும் தவறானவை

11. **தவறான இணையைக் கண்டுபிடி.**
    A) பழைய கற்காலம் - கற்கருவிகள்
    B) பாறை ஓவியங்கள் - குகைச் சுவர்கள்
    C) செப்புத்தகடுகள் - ஒரு வரலாற்று ஆதாரம்
    D) பூனைகள் - முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

12. **பிற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.**
    A) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.
    B) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.
    C) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.
    D) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

13. **பொருத்துக.**
    a) பாறை ஓவியங்கள் 1. செப்புத் தகடுகள்
    b) எழுதப்பட்ட பதிவுகள் 2. மிகவும் புகழ்பெற்ற அரசர்
    c) அசோகர் 3. தேவாரம்
    d) மதசார்புள்ள இலக்கியம் 4. வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

    **குறியீடுகள்:**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 4 | 1 | 2 |

> ஆப்பிரிக்காவில் மனித மூதாதையர்களின் சான்றுகள் கிடைத்துள்ள இடங்கள்.
> **பெரும்பிளவு பள்ளத்தாக்கு**
> சாட், துருக்கானா ஏரி, ஹடார், இடைஅவாஷ், ஒல்டுவாய் பள்ளத்தாக்கு, லேடோலி, டாங், ஸ்டெர்க்பான்டைன், ஸ்வார்ட் கிரான்ஸ், குரோம்டிராய்.

14. **பொருத்துக.**
    a) தாழிகள் 1. இலக்கிய ஆதாரம்
    b) மகாபாரதம் 2. நினைவுச் சின்னம்
    c) சாஞ்சி ஸ்தூபி 3. மதசார்புள்ள இலக்கியம்
    d) பட்டினப்பாலை 4. கலைப் பொருட்கள்

    **குறியீடுகள்:**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 4 | 3 | 2 |

> பழைய கற்காலம் பேலியோலிதிக் எனப்படுகிறது. பேலியோலிதிக் என்றால் பழைய கல் என்று பெயர். கடினமான, கரடுமுரடான குவாட்ஸ் கற்களை பயன்படுத்தியதால் அவர்கள் காலம் பழைய கற்காலம் எனப் பெயர் பெற்றது.

15. **'இஸ்டோரியா' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்.**
    A) விசாரிப்பதன் மூலம் கற்றல்
    B) கற்றல் மூலம் அறிதல்
    C) ஆராய்ந்து அறிதல்
    D) அகழ்வாராய்ச்சி செய்தல்

16. **'தர்மா' என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள்**
    A) பிச்சை
    B) சிந்தனை
    C) அறநெறி
    D) கட்டுப்பாடு

> **பயிர்கள் :** கோதுமை, பார்லி, பட்டாணி ஆகியவை 10000 ஆண்டுகளுக்கு முன்பே பயிரிடத் தொடங்கப்பட்டுவிட்டன. காய்–கனி மற்றும் கொட்டைதரும் மரங்கள் பொ.ஆ.மு. 4000 ஆண்டுகளிலேயே விளைச்சலுக்காகப் பயிரிடப்பட்டுள்ளன. அத்தி, ஆலிவ், பேரீச்சை, மாதுளை, திராட்சை இவற்றில் அடங்கும்.

1. (B) 2. (A) 3. (B) 4. (C) 5. (A) 6. (D) 7. (A) 8. (B) 9. (C) 10. (B) 11. (D) 12. (C) 13. (A) 14. (A) 15. (A) 16. (C)



suracollege@gmail.com 044-48629977 / 42043273